
# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 05 திங்கட்கிழமை 19.05.2025 கதிர் 199



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel




# 30 வருட யுத்தத்தின் மூல காரணங்களுக்கு தீர்வு காணாமல் வெற்றிக் கொண்டாட்டமா?

## அரசிடம் மனோ கணேசன் எம்.பி. கேள்வி



கொழும்பு, மே 19

"இலங்கையின் அனைத்து மக்களும் இறந்த தம் அனைத்து உறவுகளையும் ஒன்றாக ஒரே நேரத்தில் இலங்கையர்களாக நினைவுகூரும் ஒரு எதிர்காலத்தை நோக்கி நம் நாடு பயணிக்க வேண்டும். தெற்கில், வடக்கில் நிகழ்ந்த அரச மற்றும் அரசற்ற பயங்கரவாத நிகழ்வுகளுக்கு எதிரான வெற்றி கொண்டாட்டங்களையும் கூட கொண்டாடலாம். ஆனால், இந்த இலக்கை அடைய இலங்கை நாடு, முப்பது வருட காலம் யுத்தம் நிகழ்ந்தமைகான மூல காரணங்களை தேடி அறிந்து அவற்றுக்குத் தீர்வு தேட வேண்டும். மஹிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க, அநுரகுமார திஸ ாநாயக்க, சஜித் பிரேமதாஸ என்ற எவராக இருந்தாலும், தீர்வுகள் தேடா விட்டால், நாம் நின்ற அதே இடத்திலேயே நிற்போம். இதுதான் உண்மை." - என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில் மனோ கணேசன் எம்.பி. விடுத்துள்ள விசேட பதிவில்

7 ➤

# ரணில், சஜித் அணிகள் ஒன்றிணைவு! உள்ளூராட்சி சபைகளில் கூட்டு அரசு!!

## இரு கட்சிகளின் செயலாளர்களின் கையொப்பத்துடன் அறிக்கை



**கொழும்பு, மே 19**

**உள்ளூராட்சி சபைகளில் எதிரணிகள் ஒன்றிணைந்து ஆட்சியமைப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன.**

**ஐக்கிய மக்கள் சக்தியினர் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கிடையிலான சந்திப்பு இன்று முற்பகல் நடைபெற்றது.**

**இதன்போதே உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எதிரணிகள் பெரும்பான்மை பெற்றுள்ள சபைகளில், ஆட்சியமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

7 ➤

## விளக்கமறியலில் இருந்த சாமர எம்.பிக்குப் பிணை



கொழும்பு, மே 19

பதுளை மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க இன்று திங்கட்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பொதுச்சொத்துச்சட்டத்தின் கீழ் தாக்கல்

7 ➤

## மஹிந்தானந்தவுக்கு விளக்கமறியல்



கொழும்பு, மே 19

முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கம கேவை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிர தான நீதிவான் நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை உத்தர விட்டுள்ளது.

2021ஆம் ஆண்டில் விவசாய அமைச்சராக மஹிந்தானந்த அளுத்கமகே கடமையாற்றியபோது, தர மற்ற உரங்களை இறக்கு மதி செய்வதற்காக சீன நிறுவனத்துக்குப் பணம்

7 ➤

## அதிகாலை கைதான மிலான் பிற்பகல் பிணையில் வந்தார்



கொழும்பு, மே 19

இன்று அதிகாலை கைது செய்யப்பட்ட மொட்டுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மிலான் ஜயதிலக்கவுக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் பிற்பகல் பிணை வழங்கியுள்ளது.

காணி ஒன்றின் வரைப்

7 ➤

## மொட்டுவின் அடுத்த கட்டம் என்ன? 22 ஆம் திகதி நாடு திரும்பும் பஸில்

### கட்சி உறுப்பினர்களுடன் அவசர சந்திப்பு




கொழும்பு, மே 19

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு அமெரிக்கா பறந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பவுள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை அவர் இலங்கை வருவார் எனக் கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

7 ➤

இலங்கைத் தமிழரசுக் கட்சியின்

# பதில் தலைவர், பதில் செயலாளர் நியமனங்கள் சட்டபூர்வமானவை

## யாழில் செய்தியாளர் சந்திப்பில் சி.வி.கே. தெரிவிப்பு




யாழ்ப்பாணம், மே 19

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர், பதில் பொதுச்செயலாளர் நியமனங்கள் அங்கீகாரம் இல்லாதவை எனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கூறுவது தவறு. கட்சியின் மத்திய செயற்குழுவின் நியமனங்கள் சட்டபூர்வமானவை." - என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"வடக்கு, கிழக்கில் இலங்கைத் தமிழரசுக் கட்சி வெற்றி பெற்ற உள்ளூராட்சி சபைகளுக்குத் தவிசாளர் மற்றும் உப தவிசாளர் நியமனங்களுக்கு உரியவர்களைக் கட்சி நியமித்து வருகின்றது.

இதில் கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் கட்சிக்குள் சர்ச்சையொன்று உருவாகியிருந்த போதும் இது சுமுகமாகத் தீர்க்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தைத் தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

குறிப்பாக பூநகரி மற்றும் கரைச்சி சபைகளுக்கும் தவிசாளர், உப தவிசாளர் பெயர்கள் கட்சியின் மாவட்டக் கிளையால் என்னிடம் வழங்கப்பட்டது.

அதனைக் கட்சியின் பொதுச்செயலாளர் கையொப்பம் வைத்தே தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்ப வேண்டி இருந்தது. அதற்கமைய கட்சியின் தற்போதையாய் பதில் பொதுச்செயலாளருக்கு நான் தெரியப்படுத்தி இருந்த நிலையில் அவரும் அதற்குச் சம்மதம் தெரிவித்து தனது கையொப்பத்தை வைத்து தேர்தல் திணைக்களத்துக்கு அனுப்புவதாக இருந்தார்.

இவ்வாறான நிலையில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் கிளிநொச்சிக் கிளையின் தலைவருமான சிவஞானம் சிறீதரன் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வி கட்சிக்குள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

அதாவது கட்சியின் தற்போதைய பதில் பொதுச்செயலாளராக இருக்கின்ற எம்.ஏ.சுமந்திரனைத் தான் பதில் பொதுச்செயலாளராக ஏற்றுக்கொள்ளவில்லை என்றும், அவரது நியமனத்தைப் பொதுச்சபை அங்கீகரிக்கவில்லை என்றும் சுமந்திரன் தொடர்பில் சில விமர்சனங்களை சிறீதரன் எம்.பி. முன்வைத்திருந்தார்.

இதனால் ஆத்திரமடைந்த சுமந்திரன் என்னையே பதில் பொதுச்செயலாளராக ஏற்கவில்லை என்று கூறுபவர்களுக்கு நான் ஏன் கையொப்ப வைக்க வேண்டும் என மேற்கூறிய அந்த இரண்டு சபைகளின் தவிசாளர், உப தவிசாளர் தெரிவுப் படிவத்தில் கையொப்பம் வைக்க மறுத்துவிட்டார்.

இதனால் ஓர் இணக்கப்பாட்டை எட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இவ்வாறு தேர்தல் ஆரம்ப காலம் முதல் இப்போது வரை கட்சிக்குள் இணக்கப்பாட்டையே ஏற்படுத்தி வருகின்றோம்.

இவ்வாறான நிலைமையில் நீங்கள்தான் இப்போது கட்சியின் பதில் பொதுச்செயலாளர் என்றும், அந்த அடிப்படையில் கையொப்பம் வைக்குமாறு சுமந்திரனிடம் கூறியிருந்தேன்.

அதன் பின்னர் அவரும் பெயர் குறிப்பிடப்பட்ட அந்தப் பிரதேச தவிசாளர்கள் மற்றும் உப தவிசாளர்களுடன் பேசியிருந்தார். இவ்வாறாக ஒவ்வொரு கட்டத்திலும் நாங்கள் கலந்து பேசித்தான் இணக்கப்பாட்டுடன் செயற்பட்டு வந்திருக்கின்றோம்.

மேலும் கட்சியின் பதில் தலைவரான என்னையோ, பதில் பொதுச்செயலாளரையோ அங்கீகரிக்கப்படவில்லை எனச்சொல்வதில் நியாயம் இல்லை. ஆனால், ஏதோவொரு சில காரணங்களால் சிறீதரனைப் பொறுத்தவரையில் நியாயம் இருக்கலாம். ஆனால், கட்சிக்குள் வெற்றிடமாகும் பதவிகள் மத்திய செயற்குழுவால் நிரப்பப்படலாம்.

இவ்வவாறிருக்கையில் கட்சியின் பதவிகளில் இருப்பவர்கள் பொதுச்சபையில் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று இல்லை. கட்சியின் யாப்பிலும் அவ்வாறு இல்லை.

ஆக தமிழரசுக் கட்சியின் யாப்பிலோ, சட்டத்திலோ இல்லாத ஒரு விடயத்தைப் பேசுகின்றார்கள். பதில் தலைவர், பதில் பொதுச்செயலாளர் பதவி குறித்து கட்சியின் மத்திய செற்குழு தீர்மானிக்க முடியும்.

எனவே, மத்திய செயற்குழுவால் நியமிக்கப்பட்ட இந்தப் பதில் தலைவர் மற்றும் பதில் பொதுச்செயலாளர் நியமனங்கள் சட்டபூர்வமானவை. கேள்விக்கு உட்படுத்த முடியாது. கட்சி யாப்பின் பிரகாரம்தான் எல்லாம் நடக்கின்றது. அதிலும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம், அனுமதியுடனே எல்லாம் நடக்கின்றது.

மத்திய செயற்குழுவின் நியமனங்களைப் பொதுச்சபை அங்கீகரிக்க வேண்டும் என்பதும், மத்திய செயற்குழுவின் நியமனங்கள் அங்கீகாரம் இல்லாதவை என்று சிறீதரன் கூறுவதும் தவறு. இந்த நியமனங்கள் சட்டபூர்வமானவை." - என்றார்.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீடீ) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# மஹிந்தவின் தனி விழாவுக்கு அனுமதி மறுப்பு

கொழும்பு, மே .19

போர் வெற்றியின் 16ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில், திங்கட்கிழமை (19) தேசிய போர் வீரர்களின் நினைவு விழாவில் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோரை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) கேட்டுக்கொள்கிறது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி கலந்து கொள்ள மாட்டார் என்று தெரிவிக்கப்படுவதாகவும், அது தங்கள் உயிர்களை தியாகம் செய்த போர் வீரர்களின் பெயரில் ஜனாதிபதி செய்யும் ஒரு பெரிய தவறு என்றும் ஞாயிற்றுக்கிழமை (18) அன்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.



"ஒரு கட்சியாக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஒரு கட்சியாக, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவை அரச தலைவராகவும், பிரதமராக ஹரிணி அமரசூரியவை தேசிய போர் வீரர்களின் நினைவு விழாவில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்" என்று அவர் கூறினார்.

அரசதலைவர் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை என்பதை அறிந்தவுடன், போரை முடிவுக்குக் கொண்டுவந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பங்கேற்புடன் தனி விழாவை நடத்த அனுமதி வழங்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுத்தது, அந்தக் கோரிக்கை அமைச்சினால் நிராகரிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இருப்பினும், SL, ஒரு தேசிய கடமையாக, மே 20 அன்று மாலை 5.00 மணிக்கு போர் நினைவுச் சின்னத்திற்கு அருகில் ஒரு போர்வீரர் நினைவேந்தலை நடத்த முடிவு செய்துள்ளது. என்றார். படைத் தளபதி என்ற முறையில் ஜனாதிபதியின் தலைமையில் இந்த விழா நடைபெறும் என்று அதிகாரசபையின் தலைவர் பிரிகேடியர் செனரத் கோஹோன (ஓய்வு) தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இந்த நிகழ்வில் ஜனாதிபதி கலந்து கொள்ள மாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் முடிவடைந்த 16ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் தேசிய போர்வீரர் தினம், வெற்றி நாள் என்றும் அழைக்கப்படுகிறது, இது நாளை மாலை 4.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை ஸ்ரீஜயவர்தனபுர கோட்டேயில் உள்ள தேசிய போர்வீரர் நினைவுச்சின்னத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், பாதுகாப்பு துணை அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜெயசேகர (ஓய்வு), பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, கடற்படை அட்மிரல் மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்கள் மற்றும் போரின் இறுதிக் கட்டத்தில் முப்படைகளையும் வழிநடத்திய விமானப்படை மார்ஷல் ரோஷன் குணதிலக ஆகியோர் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)



## குஷ் போதை பொருளுடன் ஒருவர் கைது

கொழும்பு, மே .19

தாய்லாந்திலிருந்து மலேசியாவின் கோலாலம்பூர் வழியாக மலேசிய ஏர்லைன்ஸ் விமானம் ஆடி-179 மூலம் ஞாயிற்றுக்கிழமை (18) அன்று கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த 21 வயது தாய்லாந்து இளைஞர்

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் வழியாக ரூ.79 மில்லியனுக்கும் அதிகமான 'குஷ்' கஞ்சாவை கடத்த முயன்றதற்காக இலங்கை சுங்கத் துறையினரால் கைது செய்யப்பட்டார்.

BIA வருகை முனையத்தில் உள்ள சுங்க போதைப்பொருள்கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகள், சந்தேகத்தின் பேரில் பயணியை சோதனை செய்த போது, அவரது பைகளில் 7 கிலோ 900 கிராம் குஷ் போதை பொருளை மறைத்து வைக்கப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்தனர்.

மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கைது செய்யப்பட்ட நபரையும் போதைப்பொருட்களையும் கட்டுநாயக்க விமான நிலைய காவல் துறை போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## உப்பள ஊழியர்களின் தொடர் போராட்டம்

*ஆனையிறவு , மே .19*

*ஆனையிறவு உப்பள ஊழியர்களின் போராட்டம் ஏழாவது நாளாக இன்றும் (19) தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ளது.*




*குறித்த உப்பளத்தில் கடந்த ஒன்பது வருடங்களுக்கு மேலாக பணியாற்றும் தற்காலிக, பருவ கால ஊழியர்கள் தங்களுடைய பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் இங்கு உற்பத்தியாகும் உப்பினை ஆனையிறவில் பொதிசெய்து விநியோகிக்குமாறும், தற்போதைய முகாமையாளரை இடமாற்ற கோரியும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை கடந்த (14-05-2025) ஆனையிறவு உப்பளத்தின் முன்பாக முன்னெடுத்து இருந்தனர்.*

*இதனையடுத்து, குறித்த கவனயீர்ப்பு போராட்டம் இன்றும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த போராட்டத்திற்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் மற்றும் சமத்துவ கட்சியினுடைய ஆதரவாளர்கள், பளைப் பிரதேச சபையினுடைய ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியினுடைய பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்டோர் தமது ஆதரவுகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)*



## தெஹிவளையில் துப்பாக்கிச் சூடு! உயிர்ச் சேதம் ஏதும் ஏற்படவில்லை!!

கொழும்பு, மே 19

தெஹிவளை, நெடிமல பகுதியில் கடையொன்றில் இன்று திங்கட்கிழமை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு இனந்தெரியாத சந்தேகநபர்களே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதலில் உயிர்ச் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்று பொலிஸார் மேலும் கூறினர்.

## விசாரணைக் குழுவில் ஆஜராகவுள்ள தேசபந்து தென்னகோன்!



கொழும்பு, மே .19

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனின் தவறான நடத்தை மற்றும் கடுமையான பதவி துஷ்பிரயோகம் செய்தமை குறித்து, விசாரணை செய்து அறிக்கை அளிக்க நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு இன்று (19) முதல் விசாரணை நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளது.

அதன்படி குறித்த விசாரணை குழு மே 19ஆம் திகதி பிற்பகல் 2:00 மணிக்கு தேசபந்து தென்னகோனை ஆஜராகுமாறு அழைப்பு விடுத்தது.

இதற்கமைய தேசபந்து தென்னகோன் இன்றைய தினம் முதல் தடவையாக குழுவின் முன்னிலையில் ஆஜராகவுள்ளார்.

## 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்!

கொழும்பு, மே 19

நாட்டின் சீரற்ற காலநிலை காரணமாக ஆறு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் இன்று அறிவித்துள்ளது.

இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணி வரை அமுலில் இருக்கும் என்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

இதன்படி, கொழும்பு, காலி, களுத்துறை, கண்டி, கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் உள்ள பல பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு முதலாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# 20 பெண்களை சீரழித்த தி.மு.க., நிர்வாகி: இ.பி.எஸ்., காட்டம்!

"தி.மு.க. குற்றவாளிகள் அடங்கிய கூடாரத்தைப் பாதுகாக்க முயற்சிக்கும் 'சார்'கள் மானமிருந்தால் வெட்கித் தலைகுனியட்டும்" என அ.தி.மு.க., பொதுச்செயலாளர் இ.பி.எஸ்., தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை: ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தில் திமுக இளைஞரணி நிர்வாகி தெய்வச்செயல் என்பவன் கல்லூரி மாணவியை ஏமாற்றி பிற திமுக 'சார்'களுக்கு இரையாக்க முயற்சித்ததாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது. இந்த வழக்கில் எப்.ஐ.ஆர்., பதிய அலைக்கழித்த தமிழக அரசின் காவல்துறை, அரக்கோணம் தொகுதி அ.தி.மு.க., எம்.எல்.ஏ., ரவியிடம் மாணவி முறையிட்ட பிறகே எப்.ஐ.ஆர்., பதிந்துள்ளது.

மேலும், தன்னைப் போன்றே '20 வயதுள்ள 20 பெண்கள்' தெய்வச்செயலின் கொடூரப் பிடியில் சிக்கியுள்ளதாக அந்த மாணவி தெரிவித்துள்ளார். 'பொள்ளாச்சி பொள்ளாச்சி' என்று மேடைதோறும் கூவிய முதல்வரே, 'உங்கள் அலங்கோல ஆட்சிக்கு அரக்கோணமே சாட்சி' தானே? பொள்ளாச்சி வழக்கிற்கும் இந்த வழக்கிற்கும் என்ன வித்தியாசம் தெரியுமா? பொள்ளாச்சி வழக்கை நான் நேர்மையாக சி.பி.ஐ.,க்கு மாற்றினேன்.

நீங்களோ, அரக்கோணம் வழக்கை நீர்த்துப் போக எல்லா வேலைகளையும் செய்துகொண்டு இருக்கிறீர்கள். பாதிக்கப்பட்ட பெண் தெளிவாக 'உங்கள் நண்பர் பெற்றெடுத்த பிள்ளை' அமைச்சர் மகேஷ் உள்ளிட்ட தி.மு.க.,வினர் பெயரைச் சொல்லி, தான் மிரட்டப்படுவதாக சொல்கிறார்.

தி.மு.க. குற்றவாளிகள் அடங்கிய கூடாரத்தைப் பாதுகாக்க முயற்சிக்கும் 'சார்'கள் மானமிருந்தால் வெட்கித் தலைகுனியட்டும். 20 வயது பெண்ணை பாலியல் ரீதியாக துன்புறுத்தத் துடிக்கும் தி.மு.க., நிர்வாகி(கள்) மீது இந்த 'டம்மி அப்பா' அரசு நடவடிக்கை எடுக்குமா? எடுக்காவிடில், மக்கள் துணையோடு நிச்சயம் அ.தி.மு.க., மிகப்பெரிய போராட்டங்களை முன்னெடுக்கும். இவ்வாறு இ.பி.எஸ்., கூறியுள்ளார். (ஐ)





## நடிகர் சங்க கட்டடம் தாமதத்திற்கு காரணம் நடிகர் விஷால் விளக்கம்

சென்னை நடிகர் சங்கம் கட்டடம் தாமதமாவதற்கு நான் காரணமில்லை, என, மதுரையில் நடிகர் விஷால் தெரிவித்தார்.

மதுரையில் மீனாட்சி அம்மன் கோயிலில் தரிசனம் செய்து வெளியே வந்த அவர் கூறியதாவது: ரசிகர் மன்ற நிர்வாகி இல்ல திருமணத்திற்காக மதுரை வந்தேன். மீனாட்சி அம்மனை தரிசித்தேன். 2006ல் 'திமிரு' சூட்டிங்கிற்கு பின் இப்போது தான் வந்தேன். அம்மனை மனம் உருகி வேண்டிக்கொண்டேன்.

மதுரை மக்கள் பாசம் காட்டுவதும், உணவு உபசரிப்பு பண்பிலும் ஒருபோதும் மாற மாட்டார்கள். நூறு ஆண்டுகளுக்கு பின் வந்தாலும் இதே பாசம், சிரிப்பு இங்கே இருக்கும்.

நடிகர் சங்கக் கட்டடம் தாமதத்திற்கு நான் காரணம் இல்லை. ஆறு மாதத்தில் முடிக்க வேண்டியதை, நடிகர் சங்கம் தேர்தல் வைத்து எண்ணிக்கை என்ற பேரில் நீதிமன்றம் சென்றதால் 3 ஆண்டுகள் தாமதமாகி விட்டது. இன்னும் 4 மாதங்களில் முடிந்து விடும். இந்தியா - பாக்., போர் தேவையில்லாதது, தவிர்த்திருக்கலாம். நம் ராணுவ வீரர்கள் உயிரிழக்கும் போது கஷ்டமாக உள்ளது என்றார். (ஐ)

## அணுசக்தியிலும் தனியாருக்கு வாய்ப்பு:



நாட்டின் அணுசக்தி உற்பத்தியை அதிகரிக்க இதுவரை இல்லாத அளவிற்கு தனியார் மயத்திற்கு வழிவிட மத்திய அரசு தயாராகி வருகிறது. இதற்கென 1962ல் இயற்றப்பட்ட சட்டத்தில் திருத்தம் கொண்டுவர கனகச்சிதமாக வேலை நடந்து வருவதாக டில்லி வட்டாரம் தெரிவிக்கிறது.

பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு தொடர்ந்து ஆட்சியில் இருந்து வரும் நிலையில் பழைய சட்டங்களை அகற்றியும், புதிய சட்ட திருத்தங்களையும் கொண்டு வந்து புதிய வழியை உருவாக்கி வருகிறது. காஷ்மீர் பிரிப்பு, காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து ரத்து, இந்திய குடியுரிமை சட்ட திருத்தம், சாதிவாரி கணக்கெடுப்பு, முத்தலாக் ரத்து, வக்ப் வாரிய சட்ட திருத்தம் , ஒன்ரேங்க் ஒன் பென்ஷன், இவ்வாறு பல சட்டங்கள் வடிவிற்கு வந்துள்ளன. இதன் இன்னொரு புதிய முயற்சியாக அணுசக்தி உற்பத்தியில் சட்ட திருத்தம் கொண்டு வரப்பட உள்ளது. வரும் மழைக்கால கூட்ட தொடரில் இந்த சட்ட முன்வடிவு தாக்கல் செய்யப்படும் என மத்திய அரசு வட்டார தகவல் தெரிவிக்கிறது.

கடந்த பிப்ரவரி மாதம் மத்திய நிதி அமைச்சர் தாக்கல் செய்த பட்ஜெட்டில் இதற்கான ஒரு அறிவிப்பையும் வெளியிட்டார். இதன்படி ரூ.20 ஆயிரம் கோடி ஒதுக்கீட்டில் சிறிய அளவிலான அணு உற்பத்தி கூடங்கள் அமைக்கப்படும். தனியார் பங்களிப்பும் இதில் இருக்கும் . மேலும் 2033ம் ஆண்டுக்குள் ஐந்து சிறிய உலைகள் அமைக்கப்படும் என அறிவித்து இருந்தார்.

புதிய அணுகுமுறையாக தனியார் நிறுவனங்கள், வெளிநாட்டு நிறுவனங்கள் கூட, அணுசக்தி உற்பத்தியில் நுழைய ஏதுவாக, 1962ம் ஆண்டு அணுசக்திச் சட்டத்தில் திருத்தங்கள் வரவுள்ளன.

இது தவிர, இந்தத் துறையில் முதலீட்டை ஈர்ப்பதற்காக பல பெரிய முடிவுகள் எடுக்கப்படும். இதற்காக, சட்டத்தில் உரிய மாற்றம் செய்யப்படும். உண்மையில், இந்திய அரசாங்கம் அணுசக்தித் துறையில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்த போகிறது என்றே சொல்லலாம். இந்தத் திருத்தங்கள் வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதில் தடையாக இருக்கும் சட்டத் தடைகளை நீக்கும். இந்த சட்டத்தில் 2 முக்கிய மாற்றங்கள் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் இது மிக பெரிய சவாலானதாகவே இருக்கும்.

அணு உலையில் ஏதேனும் விபத்து ஏற்பட்டால் உபகரண விற்பனையாளர்களின் பொறுப்பை குறைக்கும் வகையில் அவர்களுக்கு ரிலீப் தரும்படியாக, அணுசக்தி சட்டத்தில் விதிகளில் தளர்வு ஏற்படுத்தப்படும். இதன் மூலம் ஒப்பந்தத்தின் அசல் மதிப்பிற்கு ஏற்ப பண இழப்பீட்டை கட்டுப்படுத்துவது, இந்தப் பொறுப்பில் சாத்தியமான கால வரம்பு நிர்ணயிக்க முடியும். கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்களுக்கு (20 ஆண்டுகளுக்கு) முன்னர் கையெழுத்தான இந்தியா-அமெரிக்க சிவில் அணுசக்தி ஒப்பந்தத்தை வணிக ரீதியாக வலுப்படுத்துவதற்கு இந்த நடவடிக்கை முக்கியமானதாக கருதப்படுகிறது(ஐ)

# ஹோட்டலில் பரிமாறப்பட்ட பிரசாதம்: ஒடிஷாவில் பக்தர்கள் ஆவேசம்

சர்வதேச அளவில் புகழ்பெற்ற புரி ஜெகன்னாதர் கோவில் பிரசாதத்தை, ஒடிஷாவின் கடற்கரையோர ரிசார்ட்டில், சாப்பாட்டுடன் பரிமாறப்பட்டது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

ஒடிஷாவில், முதல்வர் மோகன் சரண் மஜி தலைமையில் பா.ஜ., ஆட்சி நடக்கிறது. இம்மாநிலத்தின் புரியில் கி.பி., 12ம் நூற்றாண்டைச் சேர்ந்த மிகப் பிரபலமான புரி ஜெகன்னாதர் கோவில் உள்ளது. இந்த கோவிலில் கடவுள் ஜெகன்னாதருக்கு படைக்கப்பட்ட 'மஹா பிரசாதத்தை' பக்தர்கள் மிகவும் புனிதமாக கருதுகின்றனர்.

மிகுந்த பக்தி மற்றும் மரியாதை காரணமாக, மஹா பிரசாதத்தை தரையில் அமர்ந்தபடி சாப்பிடுவது வழக்கம். இந்நிலையில், ஒடிஷாவின் புரி கடற்கரையோரம் அமைந்துள்ள 'ரிசார்ட்' எனப்படும் தங்கும் விடுதியுடன் கூடிய ஹோட்டல் ஒன்றில், 'மஹா பிரசாதம்' வினியோகிக்கப்பட்டது சர்ச்சையை எழுப்பியுள்ளது.



இது தொடர்பான வீடியோவில், டைனிங் டேபிளை சுற்றிலும் ஒரு குடும்பத்தை சேர்ந்த குழந்தைகள் உட்பட 10 பேர் இருக்கைகளில் அமர்ந்துள்ளனர்.

அவர்களுக்கு புரி ஜெகன்னாதர் கோவில் மஹா பிரசாதத்தை அர்ச்சகர் ஒருவர், சாப்பாட்டுடன் பரிமாறுகிறார். அப்போது ஒருவர், அர்ச்சகரிடம், இதுபோன்று செய்வது ஏன் என கேள்வி எழுப்பியதும் வீடியோவில் பதிவாகி உள்ளது.

இந்த வீடியோ, சமூக வலைதளங்களில் வேகமாக பரவியதைத் தொடர்ந்து, பக்தர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். இது தொடர்பாக, ஜெகன்னாதர் கோவில் நிர்வாகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், 'இறைவனின் தெய்வீக மஹா பிரசாதமானது, அன்ன பிரம்மாவின் வடிவமாக வழிபடப்படுகிறது.

'இந்த பிரசாதத்தை தரையில் அமர்ந்து தான், சாப்பிட வேண்டும் என்ற பாரம்பரிய நடைமுறை, பழங்காலத்தில் இருந்தே பின்பற்றப்படுகிறது. எனவே, யாராக இருந்தாலும் சாப்பாட்டு மேஜையில் அமர்ந்தபடி மஹா பிரசாதத்தை சாப்பிடும் செயல்களை தவிர்க்க வேண்டும். 'பக்தர்களின் உணர்வுகள், மத நம்பிக்கையை கருதி, புரியில் உள்ள ஹோட்டல்கள், தங்கள் விருந்தினர்களிடம் இதுபோன்று செய்யக் கூடாது என அறிவுறுத்த வேண்டும்' என கூறப்பட்டுள்ளது. (ஐ)

# பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை:

## அழகுக்கு அப்பால் அற்புதங்கள்!





**வைத்தியக் கலாநிதி – செ செல்வகணேஷ்,**
பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர்,
யாழ் போதனா வைத்தியசாலை.

பிளாஸ்டிக்அறுவை சிகிச்சை என்றதும் நம்மில் பலருக்கு அழகு மேம்பாட்டு சிகிச்சைகளே நினைவுக்கு வரும். ஆனால், இந்த மருத்துவத் துறையின் எல்லை மிகவும் பரந்து விரிந்தது. இதனை சாதாரண மக்கள் புரிந்துகொள்ள இங்கு தொடர்ச்சியாக எழுத விழைகிறேன்.

பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை என்றால் என்ன?

பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை என்பது மனித உடலை சரிசெய்வது, புனரமைப்பது அல்லது மாற்றுவது தொடர்பான ஒரு சிறப்பு அறுவை சிகிச்சை பிரிவு ஆகும். “பிளாஸ்டிக்” என்ற சொல் “வடிவமைத்தல்” அல்லது “வார்ப்பித்தல்” என்று பொருள்படும் “பிளாஸ்டிகோஸ்” **(Plastikos)** என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து இது வந்துள்ளது.

இது இரண்டு பிரதான பிரிவுகளாக பிரிக்கப்படும்

1. அழகு அறுவை சிகிச்சை - அழகுத் தோற்றத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட அழகு அறுவைச் சிகிச்சை.

2. புனரமைப்பு அறுவை சிகிச்சை - காயங்கள், நோய்கள் அல்லது பிறவிக் குறைபாடுகள் காரணமாக ஏற்படும் குறைபாடுகளைச் சரிசெய்வதை நோக்கமாகக் கொண்ட புனரமைப்பு அறுவைச் சிகிச்சை.

பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சையில் செய்யப்படும் பல்வேறு வகையான அறுவைச் சிகிச்சைகள் யாவை?

பிளாஸ்டிக் அறுவை சிகிச்சையின் எல்லை மிகவும் பரந்தது.

அழகு அறுவை சிகிச்சைகள்: முகத்தை அழகுபடுத்துதல் **(Facelift)**, அங்கங்களை பெரிதாக்குதல் அல்லது சிறிதாக்குதல், கொழுப்பு நீக்கம் **(Liposuction)**, மூக்கின் அழகைச் சீரமைத்தல் **(Rhinoplasty)**, கண் இமைகளை சரிசெய்தல் **(Blepharoplasty)**, முன்நோக்கி திரும்பிய காதுகளை சாதாரண நிலமைக்குத் திருப்புதல், வடுக்களுக்கான லேசர் சிகிச்சைகள், தோல் புத்துணர்ச்சிக்கான லேசர் சிகிச்சைகள் எனப் பரந்து செல்கிறது.

புனரமைப்பு அறுவைச சிகிச்சைகள்: விபத்துக் காயங்கள், தீக்காயங்கள், என்பு வெளிப்பட்ட காயங்கள், புற்றுநோய் அறுவை சிகிச்சைகள் (மார்பக புற்றுநோய்க்குப் பின் மார்பகத்தை மீண்டும் உருவாக்குதல்) அல்லது பிறவி குறைபாடுகள் (ஒட்டிய கைவிரல்களைப் பிரித்தெடுத்தல்), படுக்கைப் புண்கள் **(bed-sore)**, ஆகியவற்றிற்குப் பிறகு உடலின் அமைப்பையும் செயற்பாட்டையும் மீட்டெடுத்தல். இதில் கை சம்மந்தமான அறுவைச் சிகிச்சை, நீரிழிவு நோயாளர்களிற்கான கால்பராமரிப்பு, நிணநீர் தேக்க வீக்கம் **(Lymphoedema)** மற்றும்நாட்பட்ட சுருக்கங்கள் **(Chronic contractures)**, அறுந்த நரம்புகளைச் சரிசெய்தல், ஆண்களுக்கான மார்பகக் குறைப்பு போன்றவற்றுக்கான சிகிச்சைகள் அடங்கும்.

நுண்ணிய அறுவை சிகிச்சை (ஆைஉசழளரசபநசல): மிகச்சிறிய கட்டமைப்புகளை, அதாவது நுணுக்குக்காட்டிகளைப் **(microscope)** பயன்படுத்தி இரத்த நாடிகள், நாளங்கள் மற்றும் நரம்புகளை இணைக்கும் மிகவும் சிக்கலான நுட்பமான சத்திரசிகிச்சை முறைகளை உள்ளடக்கும். இது துண்டிக்கப்பட்ட விரல்கள் அல்லது கைகளை மீண்டும் பொருத்துவதற்கும் **(Replantations)** மற்றும் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு இழையங்களை இரத்தக் குழாய்களுடன் மாற்றுவதற்கும் **(Free tissue transfers)** அவசியமானது.

தீக்காய சிகிச்சை **(Burn Care)**: தீக்காயங்களற்கான முழுமையான பராமரிப்பு, தோல் வைத்தல் மற்றும் புனரமைப்பு அறுவை சிகிச்சைகள்.

சிறப்பு புனரமைப்பு சிகிச்சைகள்: காது புனரமைப்பு (பிறவியிலிருந்து காது இல்லாமை அல்லது காயம் காரணமாக காதை இழந்தமை), அண்ணப் பிளவு மற்றும் உதட்டுப்பிளவுச் சிகிச்சை மற்றும் உடலின் பல்வேறு பகுதிகளில் புற்றுநோய் கட்டிகளை அகற்றிய பின் புனரமைப்பு போன்ற குறிப்பிட்ட தேவைகளை நிவர்த்தி செய்தல்.

தசைநாண் மாற்று அறுவை சிகிச்சை **(Transfers of tendons)**: நரம்பு சேதம் அல்லது பிற நிலைகளால் பாதிக்கப்பட்ட மூட்டுகளின் செயல்பாட்டை மேம்படுத்துதல்.

தலைமுடி நடுகை அறுவை சிகிச்சை **(Hair Transplant)**: முடி உதிர்தல் மற்றும் வழுக்கை உள்ள பகுதிகளில் முடியை மீட்டெடுக்கும் முடி மாற்று அறுவை சிகிச்சை. மார்பக புனரமைப்பு **(Breast Reconstruction)**: மார்பக புற்றுநோய்க்காக மார்பகம் அகற்றப்பட்ட பிறகு, செயற்கை மார்பகங்கள் அல்லது நோயாளியின்சொந்த திசுக்களைப்பயன்படுத்தி மார்பகத்தை மீண்டும் உருவாக்கும் மார்பகப் புனரமைப்பு. இதனால் நோயாளியின் மனநிலை மிகவும் மேம்படுகிறது.

புற்றுநோய்புனரமைப்பு **(Cancer Reconstruction):** உடலின் பல்வேறு பகுதிகளில் புற்றுநோய்க் கட்டிகளை அகற்றியதால் ஏற்படும் குறைபாடுகளை சரிசெய்து அப்பகுதியின் தொழிற்பாட்டை வழமை நிலைக்குத் கொண்டு செல்லல்.

கை அறுவை சிகிச்சைகள் **(Hand Surgeries)**: பல்வேறு வகையான கை காயங்கள், நரம்பு இறுக்கங்களிற்கும், மூட்டு நோய்களுக்கும் சிகிச்சை அளித்தல்.

நீரிழிவு கால் பராமரிப்பு **(Diabetic Foot care)**: நீரிழிவு நோயாளிகளுக்கு காலில் ஏற்படும் சிக்கலான பிரச்சினைகளைக் குணப்படுத்துதல்.

நிணநீர் தேக்க வீக்கம் பராமரிப்பு **(Lymphoedema care)**: நிணநீர் மண்டலத்தின் செயலிழப்புக் காரணமாக ஏற்படும் வீக்கத்திற்கு சிகிச்சை அளித்தல்.

நாள்பட்ட மூட்டு இறுக்க சிகிச்சை **(Chronic contracture of limbs)**: இறுக்கமான தசைகள் மற்றும் தசைநாண்களை விடுவித்து இயக்கத்தை மேம்படுத்துதல்.

மீள்பொருத்துதல் - துண்டிக்கப்பட்ட உடற்பாகங்களை மீண்டும் இணைக்கும் அறுவைச் சிகிச்சை **(Replantations)**, இதற்கு பெரும்பாலும் நுண்ணிய அறுவைச் சிகிச்சை நுட்பங்கள் தேவைப்படுகின்றன.

(7ஆம் பக்கம் பார்க்க..)




# நைஜீரியாவில் பயங்கரவாத தாக்குதலில் 57 பேர் கொலை

நைஜீரியாவில் வட கிழக்கு பகுதியில் 2 கிராமங்களில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 57 பேர் உயிரிழந்தனர்.

மேற்கு ஆப்ரிக்காவில் அமைந்துள்ள நாடு நைஜீரியா. இந்த நாட்டில் ஐ.எஸ், அல்கொய்தா, போகா ஹாரம் உள்ளிட்ட பயங்கரவாத குழுக்கள் செயல்படுகின்றன. போகோ ஹாரம் என்ற கும்பல் போர்னோ மாகாணம் மாளம் கராண்தி கிராமத்தில் திடீரனெ தாக்குதல் நடந்தது. இந்த தாக்குதலில் அந்த கிராமத்தைச் சேர்ந்த 23 விவசாயிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இந்தியாவால் தேடப்பட்ட பயங்கரவாதி பாக்.,கில் மர்ம நபர்களால் சுட்டுக்கொலை

மேலும், 20க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். பெண்கள், சிறுமிகள் உள்பட 50க்கும் மேற்பட்டோர் கொள்ளை கும்பலால் கடத்திச் சென்றனர்.

அதேபோல் மற்றொரு கிராமத்திலும் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தி உள்ளனர். 2 கிராமங்களில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 57 பேர் உயிரிழந்தனர்.

தகவலறிந்த ராணுவத்தினர் அங்கு விரைந்து சென்றனர். அவர்கள் கொள்ளை கும்பலிடம் பிணைக்கைதிகளாகச் சிக்கி உள்ளவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. பயங்கரவாத தாக்குதலில் 57 பேர் கொல்லப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (ஐ)

# அமெரிக்க முன்னாள் அதிபர் ஜோ பைடனுக்கு புற்றுநோய்




அமெரிக்க முன்னாள் அதிபர் ஜோ பைடனுக்கு தீவிரமான புரோஸ்டேட் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அவருக்கு டாக்டர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

கடந்த ஜனவரி மாதம் அதிபர் பதவியில் இருந்து விலகிய, ஜோ பைடன் தற்போது, உடல்நலம் பாதிக்கப்பட்டு டாக்டர்கள் கண்காணிப்பில் இருக்கிறார். சமீபத்தில் அவருக்கு உடல்நலம் அதிகமாக பாதிக்கப்பட்டது. தற்போது அவருக்கு புரோஸ்டேட் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டு உள்ளது.

இந்த புற்றுநோய் கிளீசன் ஸ்கோர் 9 (கிரேடு குழு 5) என டாக்டர்கள் தெரிவித்தனர். இது நோயின் தீவிரத்தை குறிக்கிறது. பைடனும், அவரது குடும்பத்தினரும் சிகிச்சை குறித்து டாக்டர்களுடன் ஆலோசித்து வருகின்றனர்.

"தீவிரமான வகைப் புற்றுநோயாக இருந்தாலும் அதை குணப்படுத்த முடியும்" என பைடனின் குடும்பத்தினர் தெரிவித்தனர். இதற்கிடையே, "புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இருப்பது வருத்தம் அளிக்கிறது" என ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

"ஜோ பைடனின் சமீபத்திய மருத்துவ நோயறிதலைப் பற்றி அறிந்து நான் வருத்தம் அடைந்தேன். அவர் விரைவாகவும், வெற்றிகரமாகவும் குணமடைய வாழ்த்துகிறேன்" என அதிபர் டிரம்ப் கூறியுள்ளார். (ஐ)



# வாடிகனில் கோலாகலம்: பதவி ஏற்றார் போப் 14ம் லியோ



வாடிகன் நகரில் லட்சக்கணக்கானோர் முன்னிலையில், புதிய போப் ஆக ராபர்ட் பிரெவோஸ்ட் பதவி ஏற்றுக் கொண்டார்.

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் மத தலைவரான போப் பிரான்சிஸ்(88), அண்மையில் காலமானார். அதன் பின்னர் புதிய போப் ஆக அமெரிக்காவைச் சேர்ந்த ராபர்ட் பிரெவோஸ்ட் தேர்வு செய்யப்பட்டார்.

இதன்மூலம் அமெரிக்காவில் இருந்து தேர்வு செய்யப்பட்ட முதல் போப் என்ற பெருமையை அவர் பெற்றார். இந்நிலையில், வாடிகன் நகரில் லட்சக்கணக்கானோர் முன்னிலையில் புதிய போப் ஆக ராபர்ட் பிரெவோஸ்ட் பதவி ஏற்றுக் கொண்டார்.

அவரின் அதிகாரத்தை குறிக்கும் வகையில் மீனவ மோதிரம் அணிவிக்கப்பட்டது. பதவியேற்பு விழாவில் காசா, உக்ரைன் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சிறப்பு பிரார்த்தனை செய்தார்.

விழாவில், அமெரிக்க துணை அதிபர் வான்ஸ், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி, உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். இந்தியாவின் சார்பில் ராஜ்யசபா துணை தலைவர் ஹரிவன்ஷ் நாராயணன் சிங் கலந்து கொண்டு, இந்திய மக்களின் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார். (ஐ)

# புரூக்ளின் பாலத்தில் மோதிய மெக்சிகன் கப்பல்: 2 பேர் பலி

*வட அமெரிக்க நாடான மெக்சிகோ கடற்படைக்கு சொந்தமான குவாஹ் டெமோக் என்ற கப்பல், 277 பேருடன், அமெரிக்காவின் நியூயார்க் நகரத்துக்கு கடந்த 13ம் திகதி வந்தது.*

*நல்லெண்ண அடிப்படையில் 15 நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்த கப்பல், நியூயார்க் நகரின் முக்கிய அடையாளமான புரூக்ளின் தொங்கு பாலத்தின் மீது நேற்று முன்தினம் இரவு மோதியது.*

*கப்பலின் உயரமான கொடி மரம், புரூக்ளின் பாலத்தின் மீது மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது.*

*இந்த விபத்தில், கப்பலில் பயணித்த இருவர் பலியாகினர் ஊழியர்கள் உட்பட 20க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். அவர்களுக்கு உள்ளூர் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.*

*இதில், மூன்று பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக நியூயார்க் நகர மேயர் ஆடம்ஸ் தெரிவித்தார். பாலத்தின் மீது மோதியதில், கப்பலின் மூன்று கொடிக் கம்பங்கள் பலத்த சேதமடைந்தன.*

*பாலத்தை தாங்கிக்கொண்டிருந்த தூண்கள் சேதமடைந்த நிலையில், அதை சரி செய்யும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. விபத்தை தொடர்ந்து, பாலத்தில் சில மணி நேரம் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. நிலைமை சீரானதும் இயல்பு நிலை திரும்பியது.*

*புகழ்பெற்ற புரூக்ளின் பாலம், நியூயார்க் நகரின் முக்கியமான சுற்றுலா தலம், நாள்தோறும் இந்த பாலத்தின் மீது, ஒரு லட்சத்திற்கும் அதிகமான வாகனங்கள் பயணிக்கின்றன் ஆயிரக்கணக்கானோர் நடந்து செல்கின்றனர்.*

*நியூயார்க்கின் கிழக்கு ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட இந்த தொங்கு பாலம், 1883ல் போக்குவரத்திற்கு திறக்கப்பட்டது.*

*விபத்தில் சிக்கிய கப்பல், 297 அடி நீளமும், 40 அடி அகலமும் உடையது. இதன் பிரதான கொடிக்கம்பம், 160 அடி உயரம் உடையது. மன்ஹாட்டன் துறைமுகத்துக்கு செல்ல வேண்டிய கப்பல், திசை மாறி புரூக்ளின் பாலத்தை நோக்கி சென்றது தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.*

*கடந்த 6ம் திகதி, மெக்சிகோவின் அகபுல்கோ துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட இந்த கப்பல் விபத்தில் சிக்கியதை அடுத்து, அதன் பயணம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.*

*(ஐ)*

## விளக்கமறியலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்ட வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சாமர சம்பத் தசநாயக்க எம்.பி. இன்று காலை 9 மணியளவில் பதுளை நீதிவான் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

இதன்போது, நீதிவான் அவரை தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான 2 சரீரப் பிணைகளில் விடுவிக்க உத்தரவைப் பிறப்பித்தார்.

2016 ஆம் ஆண்டில் ஊவா மாகாண முதலமைச்சராகப் பணியாற்றும்போது, முன்பள்ளி சிறுவர்களுக்குப் பைகள் வழங்க அரச வங்கியால் வழங்கப்பட்ட 10 இலட்சம் ரூபா பணத்தை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்று சாமர சம்பத் தசநாயக்கவுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மொட்டுவின்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடு திரும்பிய கையோடு கட்சி முக்கியஸ்தர்களுடன் பஸில் சந்திப்பு நடத்தவுள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

அதேவேளை, கட்சியை வழிநடத்தும் பொறுப்பை நாமல் ராஜபக்‌ஷவிடம் ஒப்படைத்துவிட்டதால், நேரடி அரசியல் செயற்பாட்டில் பஸில் ராஜபக்‌ஷ பங்கேற்கமாட்டார் எனவும் அறியமுடிகின்றது.

## அதிகாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

படத்துக்கு அனுமதி வழங்கும் போது இடம்பெற்ற முறைகேடுகள் காரணமாக அரசுக்கு இழப்பு ஏற்படுத்தினார் என்று தெரிவிக்கப்பட்டு மிலன் ஜயதிலக்க இலஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் இன்று அதிகாலை கைது செய்யப்பட்டார்.

இவர் தொம்பே பிரதேச சபையின் தலைவராக இருந்த காலப்பகுதியில் இந்த முறைகேடு நடந்தது என்று தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மஹிந்தான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செலுத்தியமை தொடர்பில், அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே இன்று கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் ஆஜரானதைத் தொடர்ந்து அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## 30 வருட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"இலங்கை சமூகத்தில் சமூகத்தில் மரணித்துப் போன உறவுகள், இன்று முள்ளிவாய்க்காலிலும், தெற்கிலும் நினைவு கூரப்படுகின்றார்கள். தெற்கில் இராணுவ வெற்றி விழா நடத்தப்படுகின்றது. நினைவு கூரலும், வெற்றி விழாவும் ஒருசேர நடத்தலாம். அந்த நாள் வர வேண்டும்.

ஆனால், அந்த இலக்கை, முப்பது வருட காலம் யுத்தம் நிகழ்ந்தமைக்கான மூல காரணங்களைத் தேடி அறிந்து அவற்றுக்குத் தீர்வு தேடாமல் அடைய முடியாது.

1948 ஆம் வருட குடியுரிமை - வாக்குரிமை பறிப்புச் சட்டங்கள், சிங்களம் மட்டும் சட்டம், பண்டா - செல்வா மற்றும் டட்லி - செல்வா ஒப்பந்தங்கள் மற்றும் சந்திரிகாவின் 2000 ஆம் வருட தீர்வுத் திட்டம் ஆகியவை அகௌரவமான முறைகளில் உதாசீனப்படுத்தப்பட்டமை, 13 ஆம் திருத்தம் முழுமையாக அமுல் செய்யப்படாமை, பல இனங்கள், மதங்கள், மொழிகள் கொண்ட இலங்கையின் பன்முகத் தன்மை அங்கீகரிக்கப்படாமை, கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவின் சிபாரிசுகள் அமுல் செய்யப்படாமை, யுத்தத்தின் பின் மஹிந்த - பான் கி மூன் வெளியிட்ட கூட்டறிக்கை அலட்சியப்படுத்தப்பட்டமை ஆகிய தவறுகளைத் திருத்தி முன் நகர முடியாவிட்டால் எமது நாட்டின் தேசிய பயணம் நின்ற அதே இடத்திலேயே நிற்கும்." - என்றுள்ளது.

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் இரு கட்சிகளும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன என்று இரு கட்சிகளின் செயலாளர்களின் கையொப்பத்துடன் கூட்டறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

ஏனைய கட்சிகளுடனும் இது சம்பந்தமாகப் பேச்சு நடத்தி இணக்கப்பாட்டை எட்டுவதற்கு இரு கட்சிகளும் உத்தேசித்துள்ளன.

# ஜனாதிபதி அனுர அதிரடி: கொழும்பை கைப்பற்ற வியூகம்

*கொழும்பு, மே .19*

*கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் ஐந்து சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுடன் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இன்று (19) மாலை 4.00 மணிக்கு சிறப்பு கலந்துரையாடல் ஒன்றை நடத்த உள்ளார்.*

*கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், ஐந்து சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 9 உறுப்பினர்கள் கொழும்பு மாநகர சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.*

*கொழும்பு மாநகர சபையில் அதிகாரத்தை ஸ்தாபிப்பதை ஆதரிப்பதே இந்த உரையாடலின் நோக்கம் என்று அரசாங்க கட்சி தெரிவித்துள்ளது. (ஐ)*



# பிளாஸ்டிக் அறுவை.............

பிறவிக் குறைபாடுகள் திருத்தம் **(Congenital defect corrections)**: அண்ணப் பிளவு மற்றும் உதட்டுப் பிளவு,

கைப் பிளவு, காலில் ஏற்படும் பிறப்பு குறைபாடான பிளவு, முகச்சமச்சீரின்மை போன்ற பிறக்கும்போதே இருக்கும் பல்வேறு குறைபாடுகளைச் சரிசெய்தல்.

மாற்று அறுவைச் சிகிச்சைகள் **(Gender transfers)**: தங்கள் பாலின அடையாளத்தைச் சீரமைக்க உதவும் அறுவைச் சிகிச்சைகள்.

லேசர் சிகிச்சைகள் **(Laser treatments)**: தோல் புத்துணர்ச்சி மற்றும் பிற தோல் வடுக்களைக் குறைப்பதற்கான லேசர் கதிர் மூலம் சிகிச்சை அளித்தல்.

கொழுப்பு நீக்கம் **(Liposuction)**: உடலில் உள்ள அதிகப்படியான கொழுப்பை அகற்றி உடலின் அழகைக் கூட்டுதல்.

பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சையில் செயற்கை பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்தப்படுகிறதா?

பெயரில் "பிளாஸ்டிக்" என்று இருந்தாலும், பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சையில் அவ்வாறு செய்யப் படுவதில்லை. இருப்பினும், பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர்கள் சில குறிப்பிட்ட சிகிச்சைகளில் உயிரியல் ரீதியாக இணக்கமான **(Biocompatible)** பொருட்களை, அதாவது உள்வைப்புகள் **(Implants)** அல்லது செயற்கை உறுப்புகளை **(Prostheses)** பயன்படுத்துகின்றனர். உதாரணமாக, மார்பகத்தை பெரிதாக்குவதற்கு சிலிகன் உள்வைப்புகள் **(silicon prosthesis)** பயன்படுத்தப்படுகின்றன.

அழகு அறுவைச் சிகிச்சைகளுக்கு பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர்களை ஏன் பரிந்துரைக்கிறார்கள்?

பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் அறுவை சிகிச்சை நுட்பங்கள், உடற்கூற்றியல் மற்றும் அழகியல் கோட்பாடுகள் ஆகியவற்றில் விரிவான மற்றும் சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள். முக மற்றும் உடல் விகிதாசாரங்கள் பற்றிய அவர்களின் முழுமையான அறிவு, அவர்களின் அறுவைச் சிகிச்சை நிபுணத்துவத்துடன் இணைந்து, அழகு அறுவைச் சிகிச்சைகளை பாதுகாப்பாகவும் திறம்படவும் செய்து, இயற்கையான மற்றும் இணக்கமான முடிவுகளை அடைய அவர்களை மிகவும் தகுதி வாய்ந்த நிபுணர்களாக்குகிறது. மேலும், அவர்கள் ஏனைய சத்திர சிகிச்சைப் பிரிவுகளில் ஏற்படக்கூடிய எந்தவொரு சிக்கலையும் நிர்வகிக்க உதவி செய்யும் ஆற்றல் பெற்றவர்கள்.

பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை என்பது அழகுபடுத்துவது மட்டும்தானா?

நிச்சயமாக இல்லை. அழகு அறுவைச் சிகிச்சை ஒரு முக்கியமான அம்சம் என்றாலும், புனரமைப்பு அறுவைச் சிகிச்சை இந்த மருத்துவத் துறையின் இன்னும் ஒரு மிக முக்கிய தூண் ஆகும். விபத்துக்கள், புற்றுநோய்ச் சிகிச்சை அல்லது பிறவிக் குறைபாடுகளால் பாதிக்கப்பட்ட நபர்களின் செயற்பாட்டை மீட்டெடுக்கவும், வலியைப் போக்கவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அவர்களின் திறன்கள் அழகியல் மேம்பாட்டைத் தாண்டி வெகுதூரம் செல்கிறது.

பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை நிபுணர்களால் மிகச் சிறிய இரத்த நாளங்களையும் இணைக்க முடியுமா?

ஆம், இது அவர்களின் மிக உயர்ந்த அறுவைச் சிகிச்சை திறமையின் சான்றாகும். நுண்ணிய அறுவை சிகிச்சையில் **(Microsurgery)** நிபுணத்துவம் பெற்ற பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர்கள் 1 மில்லிமீட்டருக்கும் குறைவான விட்டம் கொண்ட இரத்த நாளங்களையும் இணைக்கும் திறன் பெற்றவர்கள். துண்டிக்கப்பட்ட விரல்கள் அல்லது கைகளை மீண்டும் பொருத்துவது மற்றும் இழையங்களை ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு மாற்றுவது போன்ற சிகிச்சைகளில் இந்த நுட்பமான திறமை அவசியம். ஏனெனில் மாற்றப்பட்ட இழையம் உயிர்வாழ புதிய இரத்த ஓட்டத்தை நிறுவுவது முக்கியம்.

பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் பல்வேறு வகையான இழையங்களை எவ்வாறு கையாளுகிறார்கள்?

பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர்கள் தோல், கொழுப்பு, தசை, எலும்பு, நரம்புகள் மற்றும் இரத்த நாளங்கள் உள்ளிட்ட பல்வேறு இழையங்களின் உடற்கூற்றியல் மற்றும் உடலியல் பற்றிய ஆழமான புரிதலைக் கொண்டுள்ளனர். ஒவ்வொரு வகை இழையங்களையும் மிகுந்த கவனத்துடன் கையாள்வதற்கும், சேதத்தை குறைப்பதற்கும், குணப்படுத்துவதை மேம்படுத்துவதற்கும் அவர்கள் நுணுக்கமான அறுவைச் சிகிச்சை நுட்பங்களில் பயிற்சி பெற்றவர்கள்.

தீக்காயச் சிகிச்சையில் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சையின் பங்கு என்ன?

தீக்காயங்களின் முழுமையான மேலாண்மையில் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் இன்றியமையாதவர்கள். ஆரம்ப மதிப்பீடு மற்றும் நிலைப்படுத்துதல் முதல், சேதமடைந்த இழையங்களை அகற்றுதல் **(Wound debridement)**, பெரிய தீக்காயப் பகுதிகளை மூடித் தோல் ஒட்டுதல் **(Skin grafting)** மற்றும் தீக்காயங்கள் ஆறிய பிறகு செயற்பாடு மற்றும் தோற்றத்தை மேம்படுத்த நீண்டகால புனரமைப்பு அறுவைச் சிகிச்சைகளிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

பிறவிக் குறைபாடுகளை பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் சரி செய்ய முடியுமா?

நிச்சயமாக. பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் உதட்டுப் பிளவு மற்றும் அண்ணப் பிளவு போன்ற பல பிறவிக் குறைபாடுகளைச் சிகிச்சையளிப்பதில் முன்னணியில் உள்ளனர்.

இந்த பிறப்புக் குறைபாடுகள் குழந்தையின் தோற்றம், பேச்சு மற்றும் உணவு உட்கொள்ளல் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தலாம். பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் இந்தக் குறைபாடுகளைச் சரிசெய்யச் சிக்கலான அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்கின்றனர்.

இவை தவிர, பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் வேறு என்ன சிகிச்சைகளைச் செய்கிறார்கள்?

முடிவாக, இந்த மருத்துவத் துறையின் எல்லை பரந்து விரிந்தது, தொடர்ந்தும் வளர்ந்து வருகிறது. பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை என்பது அழகையும் அறிவியலையும் ஒன்றிணைத்து, உடலின் அமைப்பையும் செயற்பாட்டையும் மீட்டெடுத்து,

வாழ்க்கைத் தரத்தையும் நம்பிக்கையையும் மேம்படுத்தும் ஒரு அற்புதமான மருத்துவத் துறையாகும். பிறவிக் குறைபாட்டைச் சரிசெய்து, புற்றுநோய்க்குப் பிறகு அங்கங்களைப் புனரமைப்பது அல்லது ஒருவரின் தோற்றத்தை மேம்படுத்துவது எதுவாக இருந்தாலும், பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதில் அர்ப்பணிப்புடன் உள்ளனர்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.05.2025 வெளியிடப்பெற்றது.